தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

CSI Tamil Parish Alain, UAE

# மன்னா..



கிறிஸ்து எழுந்திருக்க வில்லையென்றால்,
எங்கள் பிரசங்கமும் விருதா,
உங்கள் விசுவாசமும் விருதா.

1-கொரி / 1-Corin 15:14

And if Christ has not been raised; then our preaching is in vain and your faith is in vain.

பொழிவு: 13
ஆகாரம்: 04

April '2021


# APRIL












கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த இறைமக்களே!

உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**"நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. யோவான்: 15:12**

**This is My commandment, that you love one another as I have loved you. John 15:12.**

"உண்மையான அன்பு என்பது தனக்கு எது தேவை என்ற அடிப்படையில் ஏற்படுவது அல்ல.... இன்னொருவருக்கு என்ன வேண்டும் என்பதை அறிந்து அதற்காக ஒரு பெரிய தியாகத்தை செய்வதுதான் சிறந்த அன்பு"

*இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியின் மையமே"அன்பு" ஆகும்..

*அன்பில்லாதவன் கடவுளை அறியான் கடவுள் அன்பாகவே இருக்கின்றார்....

*அன்பு பரிசுத்தாவியின் கனிகளில் ஒன்று.. அது கடவுளின் குணாதிசயமாயிருக்கிறது... எனவே கடவுளிடம் அன்பு செலுத்தும்போது மட்டுமே பிறரிடமும் அன்பு செலுத்த முடியும்....

*இன்றைக்கு திருச்சபை அல்லது கிறிஸ்தவ வாழ்வு என்பது கடவுளின் அன்பை புரிந்துகொண்டு கடவுளின் கற்பனைகளை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருக்க அழைக்கப்படுகின்றோம்.... அப்படிப்பட்ட வாழ்வை பெற்றுக்கொள்ள நம்மை அர்ப்பணிப்போமாக.....

கடந்த நாட்களில் நடைபெற்ற லெந்துகால வழிபாடுகளிலும் குறிப்பாக லெந்துகால காலை தியானத்தில் பங்குபெற்ற திருச்சபை குடும்பத்தினர் அனைவருக்கும் என் நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உன்னத திருப்பணிக்கு எனக்கு உதவியாக இருந்த நமது திருச்சபையின் நிர்வாக குழுவிற்கும் குறிப்பாக ஒவ்வொரு நாளும் இந்த தியான வழிபாட்டினை

ஆன்லைன் மூலமாக ஒளிபரப்பு செய்த நமது திருச்சபையின் செயலாளர் திரு.சுரேஷ்ராஜன் அவர்களுக்கும், இசைக்கருவி வாசித்த திரு. ஹெர்ஷல் ஹாரிஷ், அவர்களுக்கும் நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் கடந்த மாதத்தில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகள் குறிப்பாக லெந்து கால நிகழ்வுகள்,விடுமுறை வேதாகம பள்ளி ஊழியங்கள் அனைத்திற்காக.. ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

மேலும் இந்த மாதம் நடைபெறும் நமது திருச்சபையின் அனைத்து நிகழ்வுகளுக்காக, குறிப்பாக நமது திருச்சபையின் ஆண்டு விழாவிற்காக ஜெபிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும், தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியர்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளில் கல்விக்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக ஊக்கமாய் ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயர்......

Rev. S. P Baskar






# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வாழ்வின் கொண்டாட்டம்

# THE RESURRECTION OF CHRIST - CELEBRATING OF LIFE

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! உங்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுதல் திருநாளின் நல்வாழ்த்துக்களையும்! ஸ்தோத்திரங்களையும்!! தெரிவித்துக் கொள்கிறேன்.

**கிறிஸ்து எழுந்திருக்க வில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. -1கொரிந்தியர்: 15:14**

**And if Christ has not been raised, then our preaching is in vain and your faith is in vain. 1-Corinthians 15:14**

**முன்னுரை:** ஈஸ்டர் பண்டிகை என்பது எல்லா பண்டிகையிலும் மிக சிறப்பான ஒரு பண்டிகையாகும். அதுவும் மிக முக்கிய பண்டிகை ஆகும். அந்த முக்கியம் அல்லது சிறப்பு என்பது இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம் என்பது இயேசுவின் உயிர்த்தெழுதலின் சிறப்புத் தன்மையை காண்பிக்கின்றது என்பதை புரிந்து கொள்ளலாம்.ஈஸ்டர் என்ற வார்த்தையை ஆங்கில வார்த்தை ஆகும். இது ஜெர்மனிய மொழியான "ஒஸ்டரன்" என்று வார்த்தையிலிருந்து வந்தவை ஆகும். இது எபிரேய வார்த்தையான " பெஸ்ஸா" என்பவை யில் இருந்து வந்தவையாகும். இந்த ஈஸ்டர் பண்டிகையானது பஸ்கா பண்டிகையோடும், அறுவடைப்பண்டிகையயோடும், இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பணி இவைகளோடு தொடர்புகொண்ட பண்டிகையாகும். ஈஸ்டர் பண்டிகை என்பது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் கொண்டாட்டத்தை

குறிப்பதாகும். இந்த உயிர்த்தெழுதல் என்பது மனுக்குலத்தின் வாழ்வில் பெற்றிருக்கின்ற வாழ்வின் கொண்டாட்டம் ஆகும்..

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பது ஒரு வரலாற்றின் உண்மை. இதனை யாரும் மறுக்க முடியாது. இதற்கு மகதலேனா மரியாள் ஒரு சாட்சி என்றால் இன்றைக்கு உயிரோடு வாழும் அனைத்து கிறிஸ்தவ சமூகமும் ஒரு சாட்சியாகவே இருக்கின்றனர். அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது (1-கொரிந்தியர்:15:14.) கிறிஸ்து எழுப்பப்படவில்லை என்றால் எங்கள் பிரசங்கம் விருதா, எங்கள் விசுவாசம் விருதா என்று கூறுவது மிகவும் உண்மை. இயேசு கிறிஸ்து உயிர்பெற்று எழாவிட்டால் கிறிஸ்துவ சமயம் நிலைநிற்க எந்தவிதமான ஆதாரமும் இல்லை. ஆகவே இயேசுவின் உயிர்த்தெழுந்த நிகழ்வு வாழ்வின் கொண்டாட்டமாகவே மாறிவிட்டது. விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் உறுதியாய் நிலை நிற்கவும், பாவத்திலிருந்து விடுதலை பெறவும், சமாதான வாழ்வைப் பெறவும் இந்த உயிர்த்தெழுந்த நாள் வாழ்வின் கொண்டாட்டமாகவே கொண்டாட அழைக்கப்படுகிறோம்.

### இயேசுவின் உயிர்த்தெழுதல்: பாவத்தின் (மரணத்தின்) மேல் வெற்றி கொண்டார்
### VICTORY OVER SIN:

இயேசு கிறிஸ்து முதல் முதலாவது உயிர் பெற்றவர் என்று பவுல் கூறுகிறார். முதல் மனிதனான ஆதாம் பாவம் செய்தான் அதன் பலனாக உலகில் பிறந்த எல்லா மனிதரும் பாவம் செய்து யாவரும் இறந்தார்கள் (ரோமர்: 5:12) பாவம் செய்த மனிதருக்கு முதன்மையாக ஆதாம் இருந்தார். இயேசு கிறிஸ்து பாவம் செய்யாத முதன்மையானவராய் காணப்பட்டார். பாவம் செய்து முதல் மனிதராகிய ஆதாமின் மூலம் உலகத்தின் மக்கள் யாவரும் பாவம் செய்து மறித்தார்களோ, அவ்வாறு பாவம் செய்யாத இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உலகத்தின் மக்கள் யாவரும் பாவத்தின் வலிமையினின்று விடுதலைப் பெற்று என்றும் கடவுளுடன் வாழும் வாழ்க்கையில் பங்கு பெறுவார்கள். இயேசு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை உள்ளவர்கள் நிலையான வாழ்வு வாழ்வார்கள். இத்தகைய நம்பிக்கைக்கு உரித்தான விசுவாசம் கொண்டவர்களாகி இயேசுவின் சீடர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை பிரஸ்தாபம் செய்தார்கள் (ரோமர்: 5:15-21, 1-கொரி:15:20-22)

### இயேசுவின் உயிர்த்தெழுதல்: பயத்திலிருந்து விடுதலை தந்தது
### FEAR LEAVES LIFE.

இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றபின் அவருடைய சீடர்கள் அவரின் எதிரிகளுக்கு (ரோமர்களுக்கும், யூத சமயத் தலைவர்களுக்கும்)அஞ்சி ஒளிந்து கொண்டார்கள்.(யோவான்: 20:19) இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கையில் யூத மக்கள் எதிர்பார்த்த மீட்பர் (மெசியா) அவர்தான் என்று நம்பி இருந்தார்கள். அவரை கொடுமையாக கொன்றபோதோ தங்கள் நம்பிக்கையை முழுவதும் இழந்தார்கள். (லூக்கா: 24:20,21) ஆனால் இயேசு உயிர்த்தெழுந்ததற்குப்பிறகு அவர்களின்

கண்ணாலே பார்த்ததால் சீடர்கள் சிறிதேனும் அஞ்சாமல் இயேசு உயிர்த்தெழுந்தார் அதற்கு நாங்கள் சாட்சிகள் என்று கூறினார்கள். மற்றும் தாங்கள் ஆண்டவருக்காக பாடுகள் படவும், உயிரைத்தியாகம் செய்யவும் முடிவு செய்தனர் (அப்: 4:18-20,5:28-40) இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் கண்டு பயந்து இருந்தவர்கள் இப்போது உயிர்த்தெழுதல் நிமித்தமாக பயம் நீங்கி நம்பிக்கையுடன் உறுதியுடன் வாழ்ந்தார்கள்.

## இயேசுவின் உயிர்த்தெழுதல்-புதுவாழ்வு தந்தது;
## TO GIVE NEW LIFE:

இயேசு உயிர்த்தெழுதலின் வழியாக, நம்பிக்கையற்றவர்களாக இருந்த சீடர்கள், விசுவாசத்தில் உறுதியானார்கள். பயந்து வாழ்ந்தவர்கள் பெலனடைந்தார்கள். இயேசுவின் உயிர்த்தெழுதலின் வழியாக இந்த அனுபவங்களை சீடர்கள் பெற்றார்கள். இது புது வாழ்வின் அடையாளமாகும். அதுமட்டுமின்றி இது ஆண்டவரின் சுத்த கிருபையும் ஆகும்.2தீமோ:1:9,10-இல் இயேசுவின் உயிர்த்தெழுதலின் மூலம் அவரை நம்பி வாழ்வோர்க்கு அழியா வாழ்வை தருகின்றார். அவர் நம் செயல்களை முன்னிட்டு அல்ல, காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத்தின்படி, கிறிஸ்து இயேசுவின் வழியாக நமக்கு அளிக்கப்பட்ட அருளின்படி நம்மை மீட்டுள்ளார். நமக்கு தூய வாழ்வு வாழ அழைப்பு கொடுத்துள்ளார். நம் மீட்பராகிய கிறிஸ்து இயேசு உலகில் தோன்றியதின் மூலம் இப்போது அவருடைய அருள் வெளிப்பட்டுள்ளது. அவர் மரணத்தை அழித்து, அழியா வாழ்வை உயிர்த்தெழுதலின் வழியாக நமக்கு அருளினார். ஆகவே இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு புதுவாழ்வு தந்துள்ளது.

## இயேசுவின் உயிர்த்தெழுதல்: புதிய பிறப்பு தந்தது
## RESURRECTION AND A NEW BIRTH:

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மூலம் புது வாழ்வு மட்டுமல்ல புதிய பிறப்பும் பெறுகின்ற ஒரு அனுபவமாய் இருக்கிறது. இந்த அனுபவம் ஆவிக்குரியது 1பேதுரு:1:4-இல் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்ற தும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கு ஏதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இறக்கத்தின் படியே நம்மை மறுபடியும் ஜெநிபித்தார். ரோமர்: 6:1-6-இல் இயேசு பாவத்திற்கு என்று மறுக்கிறார், தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அவ்வண்ணமாகவே இயேசுவின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொண்டவர் கிறிஸ்துவுக்காக மறுக்கின்றார். இயேசு கிறிஸ்துவில் மீண்டுமாக பிறக்கின்றார் என்பது ஒரு புதிய பிறப்பாகும். உதாரணத்திற்கு பேதுரு இயேசுவின் பாடுகளைக்கண்டு மறுதலித்ததைப் பார்க்கின்றபோது செத்தவராகவும் மீண்டும் உயிர்த்தெழுதலின் இயேசுவை பார்க்கின்ற பொழுது புத்துயிர் பெற்றவராகவும் காணப்படுகின்றார் (மத்தேயு: 26:33-35) எனவே இயேசுவின் உயிர்த்தெழுதல் புதிய பிறப்பை தருகின்றது...



## இயேசுவின் உயிர்த்தெழுதல்: விசுவாச வாழ்வின் புதிய ஆரம்பம்-

2-கொரி 5:17-இல் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தன்னை விசுவாசிக்கும் சீடர்களுக்கும், மற்ற அனைவருக்கும் ஒரு வாழ்வின் புதிய ஆரம்பம் ஆகும். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புதிய சிருஷ்டி என்று பவுல் கொரிந்து சபைக்கு மிகத்தெளிவாகச் சொல்லுகிறார். இனி பழைய வாழ்வில் இருந்த அச்சம், பயம், நம்பிக்கை இல்லாத வாழ்வு இவைகளுக்கு இனி இடம் இல்லை. உயிர்த்தெழுதலுக்கு பிறகு எல்லாம் புதியது, புதிய அனுபவம் புதிய சிந்தனை, இவைகளை ஒருவர் பெற்றுக்கொள்ளலாம். உயிர்த்தெழுந்த ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும் அனைத்து கொழுந்திய ரும் இனி பழைய சிந்தனைகளை கலைத்துவிட்டு புதிய பலனைப் பெற்று இயேசுவுக்காக வாழ வேண்டும் என்பதுதான் பவுலின் அறைகூவல். எனவே புதிய சிருஷ்டி என்பது பயம், நம்பிக்கை இல்லாத வாழ்வு, சமாதானமற்ற வாழ்வு இவை குறித்து இனி பயமில்லாமல் வாழலாம் என்பதாகும். கொலொ 3:10-ல் தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கு ஒப்பான பூரண அறிவு அடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுங்கள் என்பதாகும். எனவே இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்பது புதிய விசுவாசவாழ்வின் புதிய ஆரம்பமாகும்....

எனவே இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாக வாழ்வின் எதிர்கால நம்பிக்கையை நமக்கு உண்டு பண்ணினார். நாம் இந்த உலகத்தில் வாழும்போது மட்டுமல்ல நாம் மரணம் அடையும் பொழுது நமக்கு மறுவாழ்வு உண்டு என்பதுதான் இந்த நம்பிக்கை. ஆகவே இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசு வாசிக்கின்றவர்களுக்கு அழிவு இல்லை என்பதனையும் நாம் ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும். அவர் எல்லா காலங்களிலும் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையில் வாழ ஆண்டவர் நம்மை அழைக்கின்றார்.....

உயிர்த்தெழுந்தஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயர்
Rev. S. P. Baskar



# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் உடன் விசுவாசிகளே...

உயிர்த்தெழுந்தவரும், நம்மை வெற்றிச்சிறக்க பண்ணுகிறவரும், பர்வதங்களையும் மெழுகு போல் உருகப்பண்ணி தடைகளை அகற்றுபவராக முன்செல்லும் சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் உங்களுக்கு என் ஈஸ்டர் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

2021-22 புதிய கல்வி ஆண்டில் கடந்து செல்ல இருக்கும் நம்முடைய பிள்ளைகள் யாவரையும் ஆண்டவர்தாமே தம்முடைய பரத்தின் ஞானத்தினால் நிறைத்து ஆசீர்வதிப்பாராக. தேர்வு எழுதி இருக்கிற பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறவும் உயர் கல்விக்காக பெற்றோர் எடுக்கும் முயற்சியில் கர்த்தரின் கிருபை உடனிருக்கவும் ஜெபிப்போம்.

நடைபெறும் லெந்துகால காலை தியானத்தில் பங்குபெறுகிற குடும்பத்தினர் அனைவருக்கும் என் நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சபையின் விடுமுறை வேதாகம பள்ளி வகுப்புகள் ஆன்லைன் மூலமாக நடத்துவதற்கு கர்த்தர் கிருபை கூர்ந்தார். இதை உற்சாகமாய் முன்னின்று நடத்தின சகோ. ஜார்ஜ் ஸ்டீபன்சன், அவரது குடும்பம், இணைந்து பணியாற்றிய ஆசிரியர்கள், மற்றும் குழுவினருக்கு எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒத்துழைப்பு அளித்த பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும், பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஒருவருடத்தை கடந்துவிட்டோம்... முழுமையாய் இன்னும் ஆலைய கதவுகள் திறக்கபடவில்லையென்றாலும்; தனி ஜெபத்தினாலும், ஜெபக்குழுவாகவும், தியாக–உற்சாக காணிக்கைகளினாலும் இவ்வூழியத்தை தாங்கி வருகிற உங்களுக்கு, கர்த்தர் தெய்வீக சமாதானத்தை அருளுவதோடு தமது செட்டைகளின் நிழலில் உங்களை பாதுகாத்து மகிமையினாலும் கனத்தினாலும் உங்களை முடிசூட்டுவார். அனைவரோடும் கர்த்தருடைய பாதுகாப்பும் அரவணைப்பும் இருக்கவேண்டும் என்று சொல்லி ஜெபிப்போம், ஜெபிக்கிறோம்...

இப்படிக்கு அன்புடன் கிறிஸ்துவின் பணியில் எஸ். சுரேஷ் ராஜன்




**"ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராய்க்குப் பிள்ளையில்லாதிருந்தது. எகிப்து தேசத்தாளாகிய ஆகார் என்னும் பேர்கொண்ட ஒரு அடிமைப்பெண் அவளுக்கு இருந்தாள். ஆதி:16:1**

**"NOW SARAI, ABRAM'S WIFE, HAD BORNE HIM NO CHILDREN. SHE HAD A FEMALE EGYPTIAN SERVANT WHOSE NAME WAS HAGAR. GEN 16:1**

முன்னுரை:

ஆகார் சாராளின் அடிமைப்பெண் இவருடைய பூர்வீகம் எகிப்து ஆகும். இந்த அடிமைப்பெண் செல்வ சீமானாக இருந்த ஆபிரகாமுக்கு பிள்ளைகள் இல்லாமல் இருந்தபோது சாரால் தன்னுடைய அடிமைப்பெண்ணாகிய ஆகாரை ஆபிரகாமுக்கு கொடுத்தார். அப்பொழுது இருந்த வழக்கத்தின்படி அடிமையின் பிள்ளைகள் எஜமானுக்குரியவர்கள். தங்கள் வேலைக்காரிகள் மூலம் அல்லது அடிமைகள் மூலம் தங்கள் குடும்பங்களை கட்டுவது அன்றைய கலாச்சாரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வை ஆகும். ஆனாலும் இது கடவுளுக்கு விருப்பமான ஒன்றா? என்ற கேள்வி சாராலுக்கு இருந்தபடியால் ஆகாரை ஆபிரகாமிற்க்கு மறு மனையாட்டியாக கொடுக்கிறார்... இந்த ஆகாரைக் குறித்து சிந்திப்போம்....

## ஆகார் சந்தித்த பிரச்சனைகள்:

**நாச்சியாரின் கடின நடத்துதல்:** ஆகார் தான் கர்ப்பவதியானவுடன் தன் நாச்சியாரை அற்பமாய் எண்ணினாள். தன்னை உயர்த்திய தன் எஜமாட்டியின் வாழ்வில் ஆண்டவர் வைத்துள்ள தடைகளை புரிந்துக் கொள்ளாமல் தன் நாச்சியாரை அற்பமாய் எண்ணினார். அதனால் சாராள் ஆகாரை கடினமாய் நடத்தினார். ஆகார் வீட்டைவிட்டு ஓடிப்போகும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆகார் உண்மையிலேயே தன் எஜமானையும், எஜமாட்டியையும் நேசித்திருந்தால், திரும்பவும் மனம் வருந்தி அந்த வீட்டில் சமாதானமாய் இருந்து இருக்கலாம். பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் பிரச்சனையை விட்டே ஓடிப் போகிறார்ஆகார். சாராளை விட்டு ஆகாருக்கு ஓடிப்போக முடிந்ததே தவிர ஆண்டவருடைய சமூகத்தை விட்டு ஓடிப்போக முடியவில்லை..... கர்த்தருடைய தூதன் ஆகாரை வனாந்திரத்தில் ஒரு நீரூற்றண்டையில் கண்டார். கர்த்தருடைய

தூதன் ஆகாரை பார்த்து " நீ எங்கிருந்து வருகிறாய்"? என்று அவள் பெயரை சொல்லி கூப்பிட்டுக்கேட்டார். ஆகார் தன் நிலைமையை உண்மையாய் ஒப்புக்கொண்டார். கர்த்தருடைய தூதன் அகாரைப்பார்த்து நீ திரும்பிப்போய் உன் நாச்சியாருடன் இருக்கும் படிக்கும் அவருடைய சந்ததியைக் குறித்து வாக்குதத்தமும் கூறினார். ஆகார் ஆண்டவரை விசுவாசித்து "என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி தன்னோடே பேசின ஆண்டவருக்கு நீர் என்னைக்காண்கிற தேவன் என்று பேரிட்டார்" ஆண்டவருக்கு முதல் முதலில் பெயரிட்ட பெண் இவர்தான். அந்த இடமும் (தண்ணீர் துறவும்) "லாகாய்ரோயி" என்று புதுப் பெயர் பெற்றது. ஆண்டவருடைய தூதன் ஆகாருக்கு சொன்னபடி சாராளிடம் திரும்பிச் சென்றார் திரும்பிச் சென்று. தன் குமாரனுக்கு இஸ்மவேல் (ஆண்டவர் அங்கலாய்பைக் கேட்டார் என்று பொருள்) என்று பெயரிட்டாள்....

## ஆகாரின் வாழ்வில் இடைப்பட்ட ஆண்டவர்:

**ஆகாரை அறிந்திருந்த ஆண்டவர்:** ஆதி 16:8- கர்த்தருடைய தூதன், சாராளை விட்டு ஓடிப்போகும் ஆகாரை "சாராயின் அடிமைப்பெண்ணாகிய ஆகாரே" என்று அழைக்கிறார். நாம் யார்? நமது வேலை என்ன? எந்த சூழ்நிலையில் நாம் இருக்கிறோம் என்பது அவருக்கு நன்றாக தெரியும், நம்மை அறிந்திருக்கிற ஆண்டவர் நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் நேசிக்கிறார்....... ஆகாரின் அங்கலாய்ப்பைக் கேட்கும் ஆண்டவர்: ஆகார் பக்கம் தவறு இருந்தும், ஆகார் தன் நாச்சியாரால் ஒடுக்கப்பட்டபோதும் ஆண்டவர் ஆகாரின் அங்கலாய்ப்பைக்கேட்டார்... அவர் இஸ்ரவேலரின் பெருமூச்சைக்கேட்டார். (யாத்:2:24,25) ஒடுக்கப்படுகிற காலங்களில் அவரே (கடவுள்) நமது தஞ்சமும், அனுகூலமான துணையும் ஆவார்....

**ஆகாரை காண்கின்ற ஆண்டவர்:** ஆண்டவர் அகாரைக் கண்டார். அதை ஆகாரும் காணும்படி உதவினார்.. ஆண்டவர் நம்மை எப்போதும் காண்கிறவர். நாம் அவரை உத்தம இருதயத்தோடு பற்றிக் கொள்ளும் போது நம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி ஆண்டவருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. (2நாளா:16:9) நாம் இதை புரிந்துக்கொள்ளும்போது தான் கடவுளின் ஆசீர்வாதம் பெறுகிறோம்.....

**ஆகாரின் கண்களைத் திறந்த ஆண்டவர்:** ஆண்டவருடைய தூதன் நாச்சியாரை விட்டு ஓடிப்போகும் ஆகாரிடம் நீ எங்கிருந்து வருகிறாய்? என்று கேள்வி எழுப்புகிறார். இது ஆகாரின் செயலை புரிந்துக்கொள்வதற்கான கேள்வி...... ஆகார் மீண்டும் திரும்பி தன்னுடைய நாச்சியார் வீட்டிற்க்கு செல்ல வேண்டும் என்பதற்காகும். ஆண்டவரின் துணையுடன் 20 ஆண்டுகள் தன்னுடைய நாச்சியாரோடு வாழ்ந்தார் எ ன்பது குறிப்பிடத்தக்கது. இதனால் ஆகாரின் கண்கள் திறக்கப்பட்டதால் அவள் நீரூற்றைக்கண்டாள். அவருடைய வாழ்வில் அனேக ஆசீர்வாதங்களைப் பெற்றார் இதற்கு காரணம் இவருடைய கண்கள் திறக்கப்பட்டதே.......

எனவே ஆகாரை கண்ட ஆண்டவர் இன்றைக்கு நம்மையும் காணுகின்றார், ஆண்டவருக்கு கீழ்ப்படிந்து வாழும்போது நம்மையும் ஆசீர்வதிப்பார்......... ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....


இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா....

*Mrs. Nancy Baskar...*

Kids Work Out!


# Articles

## Primary - B






Johan Sanjo







Abighail






Jemima Ashni






Aaliya

Designed by: Mrs. Shaly Melbin








# வேதகாமத்தின் குணமளிக்கும் உணவுகள்!

**தேவன், மனிதர்களாகிய நம் ஒவ்வொருவரையும் உருவாக்கினார்... நாம் அவர் ஆலயமாகியிருக்கிறோம் என்று கொரிந்தியர் 3:16,17'ல் சொல்கிறார்...**

நீதிமொழிகள் 3:1-2ல் என் மகனே என் போதகத்தை மறவாதே, உன் இருதயம் என் கட்டளைகளை காக்கக்கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகச் செய்யும்.

நாம் எப்போது நம் சரீரத்துக்கு நன்மை செய்கிறோமோ அப்போது நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோம். அவரின் ஆலயத்துக்குள் நுழைய நமது ஆலயமாகிய சரீரத்தை மதிக்க அழைக்கப்படுகிறோம். அதனால் வேதகாமம் ஒரு சிறந்த வழிகாட்டுதல் செய்கிறது, வேதகாமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உணவுகள்:

## அப்பம்:

எசேக்கியல்4:9-11ல், கோதுமை, வாற்கோதுமை, பெரும்பயிறு, தினை,கம்பு இவை அனைத்தையும் சேர்த்து அப்பம் செய்து உண்ண சொல்கிறார் இந்த உணவில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. அத்துடன் செரிமானத்துக்கும் இன்றியமையாதது!!!

## மீன்:

மாற்கு 6:43, வனாந்திரத்தில் இயேசு மக்களுக்கு உபதேசித்து முடிந்த பின்பு புசிப்பதற்கு மீனை உண்கிறார்கள். (இயேசு கிருஸ்துவின் 12 சீடர்களில் 7 பேர் மீன் பிடி தொழில் செய்து வந்தனர்) மீனில் ஒமேகா 3 அதிகம் உள்ளது, இது மூளைக்கும் ஞாபக சக்திக்கும் மிகவும் நல்லது.

## பழங்கள்:

பேரீச்சம்பழம், மாதுளம்பழம், திராட்சை &அத்திப்பழம்... 2-சாமுவேல் 6-19 உபகாமம் 8:8 இந்தப் பழங்கள் இஸ்ரேலியர்களின் ஊட்டச் சத்திற்கான அத்தியாவசிய ஆதாரமாகும்... பழைய ஏற்பாட்டு காலங்களில் மக்கள் கூடுதலாக சாப்பிட்ட பழங்களில் பேரீச்சம்பழமும் மாதுளம்பழமும் அடங்கும். உலர்ந்த பழங்கள் ஆற்றலின் திறமைக்கு மூலமாகும். அவைகளை பயணங்களின்போது உட்கொள்ள பயணிகள் கொண்டு செல்வார்கள் பழங்கள் அனைத்து வகையான சுகாதார நலன்கள் கொண்டது. பழங்களில் நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகம் உள்ளது..!

## தேன்:

யாத்திரயாகமம் 3:17... இஸ்ரேல் எகிப்திலிருந்து விடுதலையாகி பாலும் தேனும் பாய்ந்தோடுகிற கனான் தேசத்துக்கு இஸ்ரேலியர்கள் அழைத்துச் செல்லப் படுகின்றனர்... தேன் திரவத் தங்கம் என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் அது நம்ப முடியாத சுகாதார நன்மைகள் நிறைந்தது. (பதப்படுத்தபடாத தேனை சாப்பிட்டார்கள்) தேனில் என்சைம்கள் மற்றும் ஆண்டி ஆக்ஸிஜன், மகரந்தச் சத்துக்கள் அதிகம் உள்ளது ...இது இயற்கை ஒவ்வாமைக்கு உதவும்.

## ஆலிவ்:

(உபகாமம் 6:11, லூக்கா 10:34) ஒவ்வொரு தோப்புகளையும் உனக்கு கொடுப்பதால் நீ சாப்பிட்டு திருப்தியடைவாய்... ஆலிவ் எண்ணெயை காயத்தை ஆற்றவும் பயன் படுத்தினார்கள். மேலும் ஆலிவ் எண்ணெயில் ஆண்டி ஆக்ஸிஜன இதய ஆரோக்கியத்துக்கான ஊட்டச் சத்துக்கள் உள்ளதென்றும், மேலும் புற்றுநோய் நோய் ,மனநோய் வரவிடாமல் தடுக்குமென்றும் ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்... உங்கள் ஆரோக்கியத்தை கட்டுக்குள் வைத்திருந்தால் உங்கள் திறமை கடவுளை மகிமைப் படுத்துகிறது ..!! தேவனின் நாமம் சொல்வோம்... தேக ஆரோக்கியம் வெல்வோம்....!!

**ஆரோக்கியமான உணவை உட்கொண்டு உங்கள்**

**உடம்பை ஆண்டவருக்கு கொடுப்பதே**

**நாம் அவருக்குத்தரும்**

**அளப்பரிய பரிசு !!!**



MRS. JACKULIN MILKA

WOMEN'S FELLOWSHIP

# அவன் தாய் விசுவாசமுள்ள

# யூதஸ்திரீ



YOUTH FELLOWSHIP

**அதன்பின்பு அவன் தெர்பைக்கும்லீஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான்; அவன் தாய் விசுவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன்" அப்போ 16:1**

தீமோத்தேயுவின் தாய் ஒரு நல்ல விசுவாச பெண்மணி. நீங்கள் ஒரு தாயாக உங்களுடைய பிள்ளைகளுக்கு விசுவாசமுள்ள சாட்சியை வைத்திருக்கிறீர்களா? ஒரு தகப்பனாக ஒரு நல்ல விசுவாசமுள்ள முன்மாதிரியை வைத்திருக்கிறீர்களா? "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிற தென்று நிச்சயித்திருக்கிறேன்" (2தீமோ1:5) என்று பவுல் எழுதுகிறார்.

இந்த உலகத்தில் நாம் எவ்வளவு பணம், பொருட்களை நம்முடைய பிள்ளைகளுக்காகச் சேகரித்தும், அதைப் பின் சந்ததிக்கு என்று விட்டு வைத்து போகும்படியாகவும் ஆசைப்படுகிறோம். ஆனால் அது முக்கியமானது அல்ல.

நம்முடைய வாழ்க்கையில் விலையேறப்பெற்ற பொக்கிஷமான விசுவாசத்தை நம்முடைய சந்ததிக்கு வைத்து போகிறோமா? அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது 'என்று ஆவியானவர் சாட்சியிடுகிறார். இன்றைக்கு ஆவிக்குரிய காரியங்களின் விலைமதிப்பை உணர்ந்தவர்களாக அநேக கிறிஸ்தவ குடும்பங்கள் இல்லாதது மிக வருத்தமான காரியம். பிள்ளைகளுக்கு நீங்கள் மற்ற எல்லா வற்றையும் கொடுப்பதைவிட விசுவாசத்தையும், ஆண்டவருடைய சத்தியத்தையும், ஆண்டவரைப் பற்றி உண்மையான நம்பிக்கையையும் வைத்துப் போவீர்களானால், உங்களுடைய சந்ததி ஆசீர்வதிக்கப்படும். உங்களுடைய சந்ததி கர்த்தருக்குப் பிரியமானதாகக் காணப்படும்.

ஒருவேளை நீங்கள் சேர்த்து வைக்கும் படியான பொன்னும் பொருளும் உங்களுடைய பிள்ளைகளுக்கும், உங்கள் சந்ததிக்கும் நிச்சயமாக ஆசீர்வாதமாக இருக்குமென்பது என்ன நிச்சயம்?

Mr. Santhosh Kumar



THE FAITHFUL FAMILY


# IMPORTANCE OF REPENTANCE



A teacher once gave each of her students a sack full of potatoes and instructed them to add a potato whenever they did something wrong and remove a potato when they did something good then bring the sack in one week. The students carried the sack home it was really heavy!

The students removed and added potatoes when they did something good and wrong. One whole week passed the students brought the sack to school and kept it in the table. Some had really big sack while others had the same size the teacher gave them, and some had really small sacks.

The teacher counted potatoes contained in everyone sack she gave very little but some returned with so much that the sack will tear if you add one more. The teacher asked the student who had nothing in the sack the teacher how he had been able to empty the sack. ‘You asked us to remove when we did something good and add when we did something wrong, but did you ask us to remove a potato when we repent?






## How it Works




**STEP 1** DONATE DAILY IN THIS BOX

**STEP 2** COLLECT, IDENTIFY & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



STARTING FROM NEXT ACADEMIC YEAR; THE CBS MINISTRY KIDS TOGETHER WILL SUPPORT, EDUCATE AND CHANGE ONE KID'S LIFE.

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO DROP ONE DIRHAM/DAY; AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S HOUSE BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION.

# KORIJHOLLA CHURCH PROJECT

# கொரிஜ்ஹோலா ஆலையத் திட்டம்




## இணைந்து கட்டுவோம் வாருங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபையின் ஆண்கள் சங்க அங்கத்தினர்களே, நமது திருச்சபையின் ஆண்கள் சங்கம் மூலமாக ஒடிசா மாநிலத்தின் கொரிஜ்ஹோலா கிராமத்தில் தேவாலயம் தேவாலயம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நாட்களில் ஆலையமின்றி வீதிகளிலும், வீடுகளிலும் ஆராதித்துக் கொண்டிருக்கும் சுமார் 65 குடும்பங்களுக்கு இது பயனுள்ளதாயிருக்கும். ஆகவே நமது திருச்சபையின் ஆண்கள் சங்க அங்கத்தினர்கள் யாவரும் முன்வந்து ஆண்டு உழைப்பின் சதமான தொகையினை மொத்தமாகவோ அல்லது தவனை முறையிலோ கொடுத்து; கர்த்தருடைய ஆலயத்தை இணைந்து கட்ட ஒன்றிணைவோம்.
அனுதின ஜெபத்தாலும் இவ்வூழியத்தை தாங்குவோம்.



# Kids Colouring

## A Tale of Two Crowds

### The Miracle of Easter

"Blessed is he who comes in the name of the Lord!"
Matthew 21:9






# PRIMARY
## BEGINNER

Use the code to learn how each book got its name.

**Genesis** means ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ .
🔔 ◇ ⚐ ❁ ✦ ✦ ❁ ✦ ⚐


**Exodus** means ___ ___ ___ ___ ___   ___ ___ ___ .
⚐ ✋ ❁ ✦ ⚐   ✋ ↑ ☎

**Leviticus** is named for the ___ ___ ___ ___ ___ ___ ___ who taught God's laws.
❋ ◇ ⊠ ❁ ☎ ◇ ✂

**Numbers** is about ___ ___ ___ ___ ___ ___ ___ ___ the people.
🕒 ✋ ↑ ✦ ☎ ❁ ✦ ⚐

**Deuteronomy** means ___ ___ ___ ___ ___ ___   ___ ___ ___
✂ ◇ 🕒 ✋ ✦ ⊙   ❋ ✈ ★
because Moses told the people about the laws again.

| ✈ | 🔔 | 🕒 | ⊙ | ◇ | ⚐ | ❁ | ❋ | ✦ | ✋ | ✂ | ☎ | ↑ | ⊠ | ★ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | G | I | L | N | O | S | T | U | V | W |



## Genesis People

The book of Genesis contains stories about many people. Find all these people in the puzzle.


ADAM
EVE
CAIN
ABEL
NOAH
ABRAHAM
SARAH

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| N | A | B | R | A | H | A | M |
| A | O | S | A | R | A | H | A |
| L | J | A | C | O | B | O | D |
| E | E | O | H | U | I | H | A |
| H | R | I | S | A | A | C | U |
| C | A | I | N | E | E | T | A |
| A | B | E | L | S | P | V | S |
| R | E | B | E | K | A | H | E |

ISAAC
REBEKAH
ESAU
JACOB
LEAH
RACHEL
JOSEPH








# JUNIOR

**Read the Book of Numbers Chapter 12,13,14 to answer this…**





How many tribes of Israel were camped in the wilderness…?

At what place where the tribes camped…?


Who told Moses to explore the land of Canaan…?

How many Spies did Moses Send to Canaan…?

What did Mosses change Hoshea's name to …?


Which route did Moses tell the spies to travel…?

What did Moses ask the 12 spies to bring back from Canaan…?



What type of people did the spies see in Canaan…?

Which tribe of enemies did the spies find in Canaan…?



How many days did the spies explore the land…?

What fruit did the spice bring back from Canaan…?

Which two spies wanted to go and conquer Canon…?

## Story of Mosses & His Spies

CROSSWORD

**INTER & SENIOR**

# THE LAW OF MOSES

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | | | |
| | | | | | | | | | | |
| | 3 | 4 | 5 | | | | 6 | 7 | | |
| 8 | | 9 | | | | | | | | 10 |
| | | | | | | | | | | |
| 11 | | | 12 | | | | 13 | | | |
| | | 14 | | | | | 15 | | | |
| | | | 16 | 17 | | 18 | | | | |
| | | 19 | | | | | | 20 | | |
| | 21 | | | | | | 22 | | | |
| | | | | | | | | | | |
| 23 | | | | | | | | | | |



# ACROSS

1. The Ten Commandments were given on ____________ _____________ (Exod. 34:29) Draw a heart in the last square.
3. The ________ covering various parts of an animal's insides were to be burned on the altar (Exod. 29:13)
6. Sacrificial animals had to _____ to take the punishment for people's sins.
9. There were over 600 of ______ _______ in the Law of Moses. (Exodus, Leviticus, Numbers, Deuteronomy)
11. Every law was a ___________________________ of God, not a suggestion.
14. Exodus 23:14 says thr____ times a year they were to keep special feasts to God.
15. Remember the Sabbath Day to keep it holy (Deut. 5:12) was ____ Saturday.
16. On the Sabbath, ___ ____ks were to be done.
19. After Moses broke the Ten Commandment tablets upon seeing the people sin, he went _______ up Mt. Sinai where God wrote the _______ Commandments on two new tablets.
21. Moses appointed Aaron to be the high priest. Aaron was _____ brother. (Exod. 28:1; 31:10).
22. God told Moses to tell Pharaoh, "Let my ______ go" (Exodus 4:23)
23. Burnt offerings for people's sins were to RE_________ on the _____________ ___ burn all night.

# DOWN

2. One of the 10 Commandments is "You _______ _____ _________" (Exod. 20:13).
4. The Israelites wandered the wilderness for 40 years, one year at __ __________ (Deut. 29:5).
5. Some sacrifices in the Law of Moses were offered for ____anks giving.
6. God sent a Deadly plague of locusts on Egypt. Then he sent a strong West Wind to get rid of the locusts the initials the plague and the kind of wind are __ __
7. Moses, Aaron and his sons saw God in heaven (Exodus 24:9-11). After this event, each one told people, " ____ have ______ God."
8. Another word for special law is D__________.
10. Another of the 10 Commands was not to bow down to idols (Exodus 20:4) because they are ___ _______.
12. To help build the tabernacle, ________ ___ well as women took free-will offerings (Exodus 35:29).
13. Because God dictated to Moses all those 600 plus laws for the Israelites to obey, the Old Testament Law is usually called the Law of ___________________ (Malachi 4:4).
17. The Israelites were told they could ___cupy a land belonging to evil people (Leviticus 20:24).
18. Burnt offerings were to be presented to the priest___the entrance to the Tabernacle (Leviticus 3:3).
19. They were to ________ various laws on their hands and foreheads to help keep them reminded (Deut. 6:8).
20. "______ prophet has risen in Israel like Moses whom the Lord knew face to face" (Deut. 34:10).

# The PARTICIPANTS March

## KIDZ COLOURING

HAZEL HARTLYN
CRASSLIN DEVONA
REAGAN SHAN
CHRIS GABRIEL
JANIA PRENI
JEMIMA ASHNI

## WORD CODE

JOHAN SANJO
JASON ERIC
JEREMIAH
JONATHAN

## CROSS WORD

JASON ERIC
ERIC AARON
JEREMIAH
JONATHAN

## BIBLE QUIZ

ROSHAN
JOSHUA
SHELBINO
JASON ERIC






**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,**
**அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**



You are encouraged to Complete the tasks given in Manna;
and do please send to us on or before 20th of every month,
in the following format.

***Email Subject:*** ***Your name / Quiz type / Month-Year***

***To Church Email:*** ***csitcalain@gmail.com***

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

*You can also download our Monthly Manna by visiting our Church Website*

***http://www.csitamilparishalain.org***

*சர்ச் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

# John யோவான் 11-20 QUIZ!




1. யூதர்கள் தங்களை சுத்திகரித்துக் கொள்ள எங்கே சென்றார்கள்?
2. யாரை கொலைச்செய்ய பிரதான ஆசாரியர்கள் ஆலோசனைப்பண்ணினார்கள்?
3. உனக்காக என் ஜீவனைக் கொடுப்பேன் என்று சொன்னது யார்?
4. ஆண்டவரைப் பார்த்து எங்களுக்கு வெளிப்படுத்த காரணம் என்ன என்று கேட்டது யார்?
5. ஆண்டவருக்கு யார் சினேகிதராயிருப்பார்கள்?
6. தேற்றரவாளன் எதைக்குறித்து உணர்த்துவார்?
7. உலகம் யாரை பகைத்தது?
8. பிரதான ஆசாரியனின் வேலைக்காரன் பெயர் என்ன?
9. பிலாத்து சிலுவையில் என்ன எழுதினார்?
10. உயிர்த்தெழுந்த இயேசு வந்தபோது யார் இல்லை??

HE IS RISEN

ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்

பிப்ரவரி மாத விடை

யோ 1:47 | யோ 2:23 | யோ 3:28 | யோ 4:40 | யோ 5:1-8 | யோ 6:24 | யோ 7: 50
யோ 8:57 | யோ 9:40 | யோ 10:23

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட், திருமதி. அகஸ்டா லாரன்ஸ், திருமதி. பிப்லின் நெல்சன், திருமதி. ஜமுனா ராணி, திருமதி. ஜெயின் ராஜவேல், திருமதி. ஜெயந்தா ஜாண், திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. ரோஸ்லின் பாலாஜி, திருமதி. பமீலா டேனியல், திருமதி. ஹெப்சிபாய் நேசமணி, திருமதி. அனித்தா ராஜன் திரு.எம்.சி.கிறிஸ்டோபர், திரு. ஜெயபிரதீப் கிறிஸ்டோபர்,




# பாடல் பிறந்த கதை

ஓசன்னா பாலர் பாடும் ராஜாவாம் மீட்பர்க்கே
மகிமை, புகழ், கீர்த்தி எல்லாம் உண்டாகவே

கர்த்தாவின் நாமத்தாலே வருங் கோமானே, நீர்
தாவீதின் ராஜா மைந்தன், துதிக்கப்படுவீர்

உன்னத தூதர் சேனை விண்ணில் புகழுவார்,
மாந்தர், படைப்பு யாவும் இசைந்து போற்றுவார்

இத்தாலியை சேர்ந்த தியோடல்ப் ஒரு சிறந்த போதகர்; புலவரும் கூட; சமுதாய சீர்திருத்தப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தார். சிறுவயதிலேயே கத்தோலிக்க மடத்தில் சேர்ந்த அவர், துரிதமாக முன்னேறி, சிறந்த தலைவரானார். அமைதிக்காக்க பாடுபட்டார்.

சார்லிமக்னே அரசன் அவரது திறமையைப் பற்றி கேள்விப்பட்டு 781'ஆம் ஆண்டு, ஆக்கென்னில் இருந்த தன் அரண்மனைக்கு அழைத்துக் கௌரவித்தார். 814ஆம் ஆண்டு சார்லிமக்னே அரசர் மரித்தார். அவரது மகன் "பக்தியுள்ள லூயிஸ்", அடுத்த அரசனாக பதவியேற்றார். ஆனால், அதற்கு முன்னிருந்த பெப்பின் அரசனின் மகன் பெரர்னாடு ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்தார். இந்த சூழ்ச்சியில் தியோடல்பும் உடந்தையாயிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். எனவே பேராயர் பதவியிலிருந்து அவரை நீக்கி, அவரை மடத்தில் சிறைப்படுத்தி வைத்தார்கள். ஒன்றும் செய்யமுடியாமல், சிறையில் அடைபட்டிருந்த தியோடல்ப், தன் துயரை மறக்க பாடல்கள் எழுத ஆரம்பித்தார் சிறையிலிருந்த, அந்நாட்களில் 820'ஆம் ஆண்டு இப்பாடலை எழுதினார்.

அவர் சிறையில் இருக்கும்போது, லூயிஸ் அரசர் குருத்தோலை ஞாயிறன்று அப்பட்டணத்திற்கு வந்திருந்தார். எனவே, பவனியிலும் கலந்துகொண்டார். பல

தெருக்களைக் கடந்து, தியோடல்ப் சிறை இருந்த மடத்தை நெருங்கும்போது, பவனி ஏதோ ஒரு காரணத்தால் தடைபட்டு நின்றது. அப்போது, அச்சிறையிலிருந்து அருமையான பாடல் ஒலி கேட்டது. இனிமையான அப்பாடலை கேட்டு ரசித்த அரசர், பாடியது யாரென வினவினார். அது, அவருடைய சிறைக்கைதியாகிய தியோடல்ப் எனக் கூறினர். இரக்கம் மிகுந்த அரசர், மனதுருகி, அந்நேரமே தியோடல்பை விடுவித்து, மன்னிப்பளித்து, மீண்டும் ஆலய பேராயராக்கினார்.

அதுமட்டுமன்றி தியோடல்ப் அன்று பாடிய இவ்வழகிய பாடலை, குருத்தோலை ஞாயிறு தோறும் பவனிப் பாடலாக, எங்கும் பாட வேண்டும், என்று கட்டளையும் விடுவித்தார்,.

**இப்பாடல் 39 சரணங்கள் உள்ளதாக எழுதப்பட்டது.**
**டாக்டர் ஜான் மேசன் இப்பாடலலை இத்தாலிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.**

# உங்களுக்கு தெரியுமா!!!

**கி.மு.650-ல்** வாழ்ந்த நாகூம் தீர்க்கதரிசி வேதத்தில் நாகூம் 2:4-ல் தற்கால வாகனங்களைப் பற்றிக் கூறப்படுகிறது. (Bus, Lorry, Van, Car, Scooter, Bi-cycle, Auto, etc.,) அவைகளின் இரைச்சல் பற்றியும், பெரிய வீதிகள் இரண்டாக கோடிடப்பட்டு பிரிக்கப்பட்டு, வாகனங்கள் இடதுசாரி, வலதுசாரியாக வரும் முறையும், இரவில் விளக்கு வெளிச்சம் உமிழ்ந்தபடி வரும் அழகு பற்றியும், அவற்றின் அதிகபட்ச வேகம் பற்றியும் தெள்ளத் தெளிவாக வேதத்தில் கூறப்பட்டுள்ளது.



நாகூம் 2:4
**"இரதங்கள் தெருக்களில் கடகடவென்றோடி, வீதிகளில் இடசாரி வலசாரி வரும். அவைகள் தீவட்டிகளைப்போல விளங்கி, மின்னல்களைப் போல வேகமாய்ப் பறக்கும்."**

# April Birthdays List



| | |
|---|---|
| 01-Apr | Mrs. Olivia Sherin W/o Mr. Jeremiah Kingston |
| 02-Apr | Mr. Blessin Paul S/o Mr. Justin Oliver |
| 02-Apr | Baby. Aaliya B. Babina D/o Mr. Babu Abraham |
| 03-Apr | Mr. Alvin Kumar Asirmanns |
| 03-Apr | Mstr. Alan Manis S/o Mr. Alvin Kumar |
| 04-Apr | Mstr. Regan Shah S/o Mr. Balaji Ramaiyan |
| 06-Apr | Mr. Herchil Harish |
| 09-Apr | Mr. A Yobu |
| 09-Apr | Mrs. Princy Ashok W/o Mr. Ashok Daniel |
| 09-Apr | Dr. Pradeev Raj |
| 10-Apr | Mr. Gilton Raj |
| 13-Apr | Mrs. Prema Ruth. T W/o Mr. Premkumar |
| 17-Apr | Mrs. Shelly Kurian W/o Dr. Shino Mathew |
| 17-Apr | Ms. Diniya Sunshine D/o Mr. D. Rajavel |
| 21- Apr | Mr. Babu Abraham |
| 28-Apr | Mr. M. Santhosh Joel Kumar |
| 29- Apr | Mr. Daniel Durai Singh |
| 30-Apr | Ms. S.M Sherin Shah D/o Mr. Silvester Solomon |
| 30-Apr | Mr. Mohana Kumar R |

## HAPPY ANNIVERSARY


| | |
|---|---|
| 05- Apr | Mr. Kingsly Stubert & Mrs. Shalini Vimala |
| 10- Apr | Mr. Baskar Rajaram & Mrs. Angelin Nalini |
| 13- Apr | Mr. Sunith Samuel & Mrs. Shiby Angel |
| 19- Apr | Mr. Nelson Sopitha Raj & Mrs. Biblin |
| 26- Apr | Mr. Melbin Paul & Mrs. Shally |






# Assembly Election Schedule 2021

## ASSAM




**Three phase poll**

Phase I: **47** seats
Date of poll: **Mar 27**

Phase II: **39** seats
Date of poll: **Apr 1**

Phase III: **40** seats
Date of poll: **Apr 6**

Total seats: **126**

Electors: **2,32,44,454**

Polling stations: **33,530**

## TAMIL NADU



Total seats: **234**

Electors: **6,28,23,749**

Polling stations: **88,936**


Single phase poll: **Apr 6**

## WEST BENGAL

Total seats: **294**

Electors: **7,34,07,832**

Polling stations: **1,01,916**




**Eight phase poll**

Phase I: **30 seats**
Date of poll: **Mar 27**

Phase II: **30 seats**
Date of poll: **Apr 1**

Phase III: **31 seats**
Date of poll: **Apr 6**

Phase IV: **44 seats**
Date of poll: **Apr 10**


Phase V: **45 seats**
Date of poll: **Apr 17**

Phase VI: **43 seats**
Date of poll: **Apr 22**

Phase VII: **36 seats**
Date of poll: **Apr 26**

Phase VIII: **35 seats**
Date of poll: **Apr 29**

## KERALA



Total seats: **140**

Electors: **2,67,88,268**

Polling stations: **40,771**

Single phase poll: **Apr 6**

## PUDUCHERRY




Total seats: **30**

Electors: **10,02,589**

Polling stations: **1,559**

Single phase poll: **Apr 6**

Counting for all states: **May 2**

KBK Pollgraphics

if **CHRIST** is not **RAISED** then our **PREACHING** is in VAIN and your **FAITH** is in VAIN.

**I CORINTHIANS 15.14**



*Designed by: Mrs. Olivia Jeremiah*


EDITOR

THE PRESBYTER,

CSI TAMIL PARISH, ALAIN, UAE

POST BOX. 67747

TEL: +971 (3) 766 8353

MOB: 056 7668 343

**Email: csitcalain@gmail.com**

**Web: csitamilparishalain.org**


STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY